ஒரு தொழிற்சாலை உருவாக்குவதற்கு ரூ.33 இலட்சம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதற்கிணங்க, ஓமலூர் பகுதியில் தொழில்முனைவோர்கள் யாரேனும் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மானியங்களைத் தரும். அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

294—

அங்கன்வாடிக் கட்டடத்தைச் சீரமைத்தல்

***61968—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 12-வது வார்டு, சன்னதி தெருவிலுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சேலம் மாவட்டம், சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 12-வது வார்டு சன்னதி தெருவிலுள்ள அங்கன்வாடி மையக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்ததால், குழந்தைகளின் பாதுகாப்பு கருதி, அருகில் உள்ள வாடகைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குப் பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநர், சேலம், அவர்களின்மூலம் நிருவாக அனுமதி பெற்று, புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், அந்தக் கட்டடத்தைச் சீரமைப்பதற்கு தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

முற்பகல் 10-40

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவியே! சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தி, உலக மக்களின் கவனத்தை ஈர்த்து சாதனை புரிந்த சரித்திரத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) கருணையின் பிறப்பிடமே! ஏழைகளின் ஒளி விளக்கு மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, 15-வது வார்டு எம்.ஜி.ஆர். காலனியில் உள்ள அங்கன்வாடி மையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த அங்கன்வாடி மையத்திற்கு அருகில் உள்ள அரசு நிலத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரி தொகுதியில் 11 அங்கன்வாடி மையங்கள் இப்பொழுது புதியதாகக் கட்டப்பட இருக்கின்றன. வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அங்கன்வாடி மையங்களைச் சொந்தக் கட்டடங்களில் மாற்ற வேண்டும் என்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையினை ஏற்று, சேலம் மாவட்டத்திலே 126 அங்கன்வாடி மையங்கள் கட்டப்பட இருக்கின்றன. அதிலே சங்கரி தொகுதியிலே மட்டும் 11 அங்கன்வாடி மையங்களும், தாரமங்கலம் வட்டாரத்திலே இரண்டு அங்கன்வாடி மையங்களும்

கட்டப்பட்டவுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்பொழுது குறிப்பிட்டிருக்கக்கூடிய 15-வது வார்டு மற்றும் 12-வது வார்டு பகுதிகளிலே செயல்படும் அங்கன்வாடி மையங்களும் இதில் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். சங்கரி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, வார்டு எண்கள் 13 மற்றும் 14-ல் உள்ள இரண்டு அங்கன்வாடி மையங்களும் பூனைகணபதி கோயிலில் உள்ள சிறிய ஓட்டுக் கட்டடத்தில் இயங்கி வருவதால், குழந்தைகள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இக்குழந்தைகளின் நலனைக் கருத்தில்கொண்டு, இரண்டு அங்கன்வாடி மையங்களுக்கும் புதிய கட்டடம் கட்டிக்கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்த அங்கன்வாடி மையத்தை வேறு இடத்திற்கு மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரின் கருத்துருவைப் பெற்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் : 292, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*